**Publication:** Tamil Murasu, pg 07
**Date:** 6 September 2021
**Headline:** Swimmer Yip Pin Xiu won medals in Paralympics



# ஒலிம்பிக்கில் இருமுறை தேசிய கீதத்தை ஒலிக்கச் செய்த சிங்கைப் பெண்

ஜப்பான் தலைநகரான தோக்கியோவில் பாராலிம்பிக் எனப்படும் உடற்குறை உள்ளோருக்கான ஒலிம்பிக் போட்டியில் சிங்கப்பூர் நீச்சல் வீராங்கனை யிப் பின் சியு இரண்டாவது தங்கப் பதக்கம் வென்று சாதித்துள்ளார்.

இவர் 50 மீட்டர் மல்லாந்தபாணி நீச்சல் எஸ்2 போட்டியில் முதலாவதாக வந்து மீண்டும் தங்கத்தை வென்றிருக்கிறார்.

இவர் 50 மீட்டர் தூரத்தைக் கடக்க எடுத்துக்கொண்ட நேரம் 1 நிமிடம் 2.04 வினாடி. இவர் இதற்கு முன் நடைபெற்ற 100 மீட்டர் மல்லாந்தபாணி நீச்சல் போட்டியிலும் இறுதிச்சுற்றில் 2 நிமிடம் 16.61 வினாடியில் நீந்தி முதலில் வந்து தங்கத்தை வென்றார்.

இரண்டு தங்கங்களை வென்று சிங்கப்பூரின் தேசிய கீதத்தை ஒலிம்பிக்கில் ஒலிக்கச் செய்த பெருமையைத் தட்டிச் சென்றார் யிப் பின் சியு.

பாராலிம்பிக் ஒலிம்பிக் போட்டிகள் ஆகஸ்ட் 24ஆம் தேதி தொடங்கி நேற்று செப்டம்பர் 5ஆம் தேதி முடிவடைந்தன.